
Registered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU
மலர் 7 இதழ் 63
National Tamil Daily தேசிய தினசரி
(15-4-65)
விசுவாவசு சித்திரை 3 துல்ஹஜ் பிறை 12 வியாழக்கிழமை

ஈழநாடு
சந்தா விபரம்
இந்தியா – இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

நீடித்த பாவனைக்கு
சொனென்ஷீன்  சொனென்ஷீன்
பற்றறிகளையே உபயோகியுங்கள்
வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்:
துரை அன் கோ
23/3 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## "அமெரிக்காவுக்கு ஒருபோதும் சரணடையோம்"

### வட வியட்நாம் ஜனாதிபதி டாக்டர் ஹோசிமின் அறிவிப்பு

ஹமலேய், ஏப்ரல் 14

அமெரிக்க ஜனாதிபதியின் வியட்நாம்பற்றிய யோசனைக்கு இலங்குவது "ஒரு பைத்தியக்காரனின் பகற்கனவு" ஆக இருக்கும் என வடவியட்நாம் ஜனாதிபதி டாக்டர் ஹோசிமின் கூறினார்.

டாக்டர் ஹோசிமினின் இதுசம்பந்தமான வானொலிப் பேச்சை நவசீன செய்திஸ்தாபனம் அறிவித்திருக்கிறது.

"வடவியட்நாம் மக்கள் ஒருபோதும் அமெரிக்காவுக்குச் சரணடையமாட்டார்கள். அமெரிக்கா வியட்நாம் யுத்தத்தில் தோல்வியடையும்" என்றும் டாக்டர் ஹோசிமின் குறிப்பிட்டார்.

அமெரிக்காவை எதிர்த்து தொடர்ந்து போராடுவதே நோக்கமாய் இருக்க வேண்டும் என அவர் தமது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்ததாயும் நவசீன செய்தி ஸ்தாபனம் அறிவித்தது. இதற்கிடையில் வியட்நாம் நிலைமை பற்றி ஆராயுமுகமாக ஜனாதிபதி ஜோன்சனின் சொந்தப் பிரதிநிதியாக திரு. ஹென்றி கெபொட்லாட்ஜ் 6 தென்கிழக்காசிய நாடுகளுக்கு அடுத்த வாரம் விஜயம் செய்கிறார்.

## பிரபல பிரிட்டிஷ் என்ஜினியர்கள் விஜயம்

கொழும்பு, புதன்

பிரிட்டிஷ் சிவில் என்ஜினியர்கள் சங்கத்தின் 100-வது தலைவரான திரு. ரபர்ட் வைன்-எட்வர்ட்ஸ், அதன் காரியதரிசி திரு. அலெக்ஸாண்டர் மெக்டொனல்ட் ஆகியோர் இன்று கொழும்பு வந்தார்கள். ஆசியாவிலும் தூரகிழக்கிலும் இவர்கள் 5 வாரம் சுற்றுப்பிரயாணத்தை மேற்கொண்டிருக்கிறார்கள்.

இலங்கையில் இந்த இருவரும் 4 நாட்கள் தங்கி இங்குள்ள நிலைமையை ஆராயவிருக்கிறார்கள். இன்றிரவு பிரிட்டிஷ் ஹைகமிஷனர் திரு மைக்கேல் வாக்கர் அவர்களுக்கு விருந்தளித்தார். நாளை அவர்கள் இலங்கை என்ஜினியர்களைச் சந்திப்பார்கள். இலங்கை என்ஜினியர்கள் இந்த இருவருக்கும் மாலை விருந்தொன்றையும் நடத்துவார்கள்.

வருகிற 18-ம் திகதி இருவரும் இங்கிருந்து மலேஷியாவுக்குப் புறப்பட்டுச் செல்வார்கள்.

### வார்ட் கழுவும் பிரச்னை தீர்ந்தது

யாழ்ப்பாணம், வியாழன்

கடந்த பல வருடகாலமாக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை ஆஸ்பத்திரி வார்ட்டுக்கள் கழுவுதல் "மொப்" பண்ணுதல் ஆஸ்பத்திரி வேலையாட்களுடைய கடமையாகவிருந்து வந்தது. புதிய அரசாங்கம் பதவிக்கு வந்தபின்னர் வார்ட் கழுவுதல் மொப் பண்ணுதல் வார்ட் பணியாளருடைய கடமைகள் என வேலையாட்கள் அவற்றைச் செய்ய மறுத்து விட்டனர்.

யாழ்ப்பாண செனக்கிய அத்தியட்சகர் எடுத்த சமரச நடவடிக்கைகள் பயனற்றுப் போகவே சுகாதார அமைச்சின் தொழில் உறவு அதிபர் திரு என் எஸ சமீத் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்து சம்பந்தப்பட்ட தொழிற் சங்கங்களுடன் மகாநாடொன்றை நடத்தி 'லேபரர்களே' வேலையாட்களே தொடர்ந்து வார்ட் கழுவும் வேலைகளைச் செய்யவேண்டும் என்று உத்தரவிட்டார்

அகில இலங்கை சுகாதார தொழிலாளர்சங்கம் அரசாங்க பயிற்றப்பட்ட வார்ட் பணியாளர் சங்கம் அரசாங்க சேவை சுகாதார தொழிற்சங்கம் அரசாங்க ஆஸ்பத்திரி தொழிலாளர் சங்கம் ஆகியோர் இந்த மகாநாட்டில் கலந்து கொண்டனர்

## அறிவித்தல்

11வது ஆண்டு நிறைவு விழாவையும், தமிழ், சிங்கள புது வருடத்தையும் முன்னிட்டு மிகப் பிரசித்தி பெற்ற சன்லூகஸ் பிறின்ஸ 25-4-65 வரை அரைச்சலர்ர். 18[1]

# "இலட்சியத்திலிருந்து நாம் விலகிவிடவில்லை"

## வரவேற்புக்கூட்டத்தில் எஸ்.ஜே.வி.

### தமிழ்பேசும்மக்கள் பொறுமையுடன் இருக்கவேண்டும் என்கிறார்

சுழிபுரம், புதன்

"நாம் எமது இலட்சியத்திலிருந்து விலகவில்லை, எவற்றையும் கைவிடவில்லை. நாம் முன்பு திரு. பண்டாரநாயக்காவுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் போலவே ஓர் உடன்படிக்கை செய்துள்ளோம். இவ்வுடன்படிக்கையில் தமிழ்பேசும் மக்களின் இழந்த உரிமைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய ஓர் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என எண்ணுகின்றேன். ஆகவே தமிழ் பேசும் மக்கள் மிகவும் பொறுமையாக இருக்க வேண்டும்" இவ்வாறு தமிழ் அரசுக் கட்சித் தலைவரும் காங்கேசன்துறைத் தொகுதி பாராளுமன்றப் பிரதிநிதியுமான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் சுழிபுரத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சுழிபுரம் மக்களால் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி திறந்த வெளியரங்கில் அளிக்கப்பெற்ற வரவேற்பு உபசாரத்திற்கு சுழிபுரம் கிராம சபைத் தலைவர் திரு. க. கந்தசுவாமி தலைமை வகித்தார். விழா ஆரம்பமாவதற்கு முன்னர், அமிர்தலிங்கம் தம்பதிகள், எஸ ஜே வி செல்வநாயகம் ஆகியோர் மங்கள வாத்தியம் முழங்க கரகம், காவடி குதிரையாட்டங்களுடன ஊர்வலமாக சுழிபுரம் கிராம பிரதான பாதைகளால் அழைத்து வரப்பட்டனர்.

திரு. எஸ ஜே வி செல்வநாயகம் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

தமிழ் பேசும் மக்கள் எம்மேல் வைத்த நம்பிக்கையினால் இலங்கையில் மூன்றாவது பெரிய கட்சியாக விளங்கக் கூடிய வகையில் 14 பிரதிநிதிகளை தெரிவு செய்து அனுப்பியுள்ளார்கள். கடந்த 9 வருடங்களாக நாம் எதிர் கட்சியாகவும், இந்த நாட்டின் சரித்திரத்தில் குறிப்பிடத் தக்க பல போராட்டங்களையும் நடாத்தியதை அகில உலகமும் அறியும், இப்படியானவர்கள் எப்படி முன்பு உரிமைகளை மறுத்தவர்களுடன் ஒன்று சேர்ந்தார்கள் எனக் கேட்கின்றார்கள் தமிழ் பேசும் மக்களின் ஒத்துழைப்பை நாடி வரும் சிங்களக் கட்சியிடம் எமது நியாயமான கோரிக்கைகளை தர யார் முன்வருகின்றார்களோ அவர்களுக்கு எமது ஆதரவை கொடுப்போம் என்று தேர்தல் காலத்தில் நாம் கூறினோம்

எமது கோரிக்கையை ஐக்கியதேசியக் கட்சியினரே ஏற்றுக் கொண்டு எமக்கு மந்திரி பதவிகள் தருவதற்கும் முன்வந்தனர் நாம் மந்திரிப் பதவிகளை ஏற்றுக் கொள்ளாமல் ஒத்துழைப்புக் கொடுக்கவே உடன் பட்டோம் பாராளுமன்



றத் திறப்பு விழாவுக்கு பின்னர் நடைபெற்ற சிம்மாசனப் பிரசங்கத்தின் போது பிரதமர் டட்லி சேனநாயக்கா கூறிய வார்த்தைகளில் நாம் நம்பிக்கை கொண்டதுடன் எமது விஷயங்களில் அதிக கவனம் செலுத்தி எமது உரிமைகளை பெறுவதற்கு நாம் பாடுபடுவோம். 1958-ம் ஆண்டு நடைபெற்ற வகுப்புக் கலவரங்கள், வகுப்புத் துவேஷங்கள் போன்றவற்றை மேலும் இந்த நாட்டில் உண்டுபண்ண சிலர் முயற்சி செய்கின்றார்கள் நாம் அவற்றுக்கு இடம் கொடுக்காமல் சினேகித பாசத்துடன் வாழவேண்டும்" நீண்ட தூரத்தை கடக்க முன்வந்த நாம் தற்காலிகமாக தங்கியுள்ளோம். எம்முடன் செய்யப்பட்ட ஒப்பந்தம் நிறைவேறாது விட்டால் நாம் விட்ட இடத்திலிருந்து

(6-ம் பக்கம் பார்க்க)

### மந்திரிக்கு கி. ச. வரவேற்பு

யாழ்ப்பாணம், வியாழன்

ஸ்தலஸ்தாபன மந்திரி திரு எம் திருச்செல்வம் இன்று யாழ்ப்பாணம்வருகிறார் இன்று மாலை அவருக்கும் தமிழரசுக் கட்சி எம் பி க்களுக்கும் உடுவில் கிராமச்சபை பொதுவரவேற்பளிக்கிறது

### நீரிலும் நடக்கலாம்!

ஹாம்பர்க், ஏப்ரல் 14

மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த ருடிகர் வாக்லர் என்ற சிற்பக்கலைஞர் சமீபத்தில் நீரின்மேல் நடந்துகாட்டினார். கையில் ஒரு பெட்டியோடும் வாயில் சிகரெட் குழாயோடும் ஆல்ஸ்டர் ஏரியில் அவர் அநாயாசமாக நடந்துசெல்வதை ஆயிரக்கணக்கானோர் ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருந்தார்கள். இவர் இவ்விதம் நடப்பதற்கு இரு கால்களிலும் நாலரை அடி நீள முனை காற்றடைத்த றப்பர் காலணிகளை அணிந்திருந்தார். இதை அணிந்து கொண்டு நீரைக் கடப்பதில் ... எனவும் ... மென அவர் கூறுகிறார்.

## டாக்டர் ராதாகிருஷ்ணனை இலங்கைத் தூதர் சந்தித்தார்

### பிரிட்டிஷ் பிரதமரும், பிரபு மவுண்ட்பேட்டனும் பார்த்தனர்

லண்டன், ஏப்ரல் 14

கண்சத்திர சிகிச்சைக்குப் பின் லண்டன் ஹோட்டல் ஒன்றில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் இந்திய ஜனாதிபதி டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணனை பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்சன் சென்று பார்த்தார்.

இருவரும் தென்கிழக்காசிய நிலைமைபற்றி விவாதித்ததாக கூறப்படுகிறது. முன்னாள் இந்திய கவர்னர் ஜெனரல் மவுண்ட்பேட்டன் பிரபுவும் டாக்டர் ராதாகிருஷ்ணனைச் சென்று பார்த்தார்.

லண்டனிலுள்ள இலங்கைத் தூதர் பேராசிரியர் மலலசேகரா டாக்டர் ராதாகிருஷ்ணனைச் சந்தித்து அவரது உடல்நலம்பற்றி விசாரித்தார்.

ஜனாதிபதிக்கு வெற்றிகரமான முறையில் கண் ஆபரேஷன் செய்யப்பட்டது. இன்னும் சிலகாலம் அவர் வைத்திய நிபுணர்களின் கண்காணிப்பில் இருந்து வருவார்.

தேசிய அரசாங்கத்தின்
உள்ளூராட்சி அமைச்சர்
கௌரவ மு. திருச்செல்வம் Q.C.
அவர்களுக்கு
உடுவில் கிராமசபையில்
இன்று 15-4-65 மாலை 6 மணிக்கு
பகிரங்க வரவேற்பு அளிக்கப்படும்
பாராளுமன்ற உறுப்பினர்களும்
கலந்துகொள்ளுவார்கள்
பிற்பகல் 4 மணிக்கு
தாவடி பிள்ளையார் கோவிலடியிலிருந்து
ஊர்வலமாக அழைத்துவரப்படுவார்கள்
உடுவில் கிராமசபைத் தலைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

ஜனநாயக ஆட்சியை நடத்துவோர் முற்றிலும் சுயநலமற்றவராக இருக்க வேண்டும். தங்கள் சொந்த அல்லது கட்சி நன்மையை நினையாமல் ஜனநாயகத்தின் நன்மையையே கருத வேண்டும்.

—மகாத்மா காந்தி


# ஈழநாடு

ELA NADU National Tamil Daily. Post Box 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

.......... விசுவாவசு ஆண்டு சித்திரை மீ 5 உ. ( 3-4-65)


## நல்ல சகுனம்

சிங்கள, தமிழ்ப் புத்தாண்டும் முஸ்லிம் மக்களின் ஈதுல் பித்ர் திருநாளும் போயா தினமும், ஈஸ்டர்வாரமும் இம்முறை சேர்ந்து வந்துள்ளது. இந்நாட்டில் சமூக, சமய ஒற்றுமை வருங்காலத்தில் ஓங்கும் என பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா விடுத்த புத்தாண்டுச் செய்தியில் நம்பிக்கை தெரிவித்திருந்தார். பலவருடங்களுக்குப் பின் இந்நாட்டின் சகல சமூக மக்களையும் கொண்ட ஒரு அரசாங்கம் ஆட்சிக்கு வந்திருப்பது பொது மக்களுக்கும் நம்பிக்கையளித்திருக்கிறது. இந்த நம்பிக்கை வீண்போகாதென்பதற்கு முக்கிய மூன்று திருநாட்கள் ஒரே தினத்தில் வந்திருப்பதை பிரதமரைப் போல் மக்களும் சுப சகுனமாகவே கொண்டிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

தேசிய அரசாங்கத்தின் வெற்றிக்கு இச்சம்பவங்கள் ஒன்றாக இணைந்து வந்திருப்பது ஒரு நல்ல சுபசகுனமாக இருப்பதாகப் பிரதமர் கருதுகிறார். அவர் கருதுவதுபோல் தேசிய அரசாங்கம் வெற்றி பெற வேண்டுமென்பதே நாட்டின் முன்னேற்றத்தையும் அமைதியையும் விரும்பும் மக்களினது விருப்பமாகும். சுப சகுனத்துடன் பிறந்துள்ள புத்தாண்டில் நாட்டில் மீண்டும் சமூக, சமய சௌஜன்யத்தை நிலைநாட்டி நாட்டைச் சுபீட்சப் பாதையில் வழிநடத்திச்செல்லவேண்டுமென்ற நல்ல நோக்கத்தை துணிச்சலுடன் நாட்டு மக்களின் ஒத்துழைப்புடனும் பிரதமர் நிறைவேற்ற வேண்டுமென்பதும் மக்களின் விருப்பமாகும்.

இந்நாட்டில் வாழும் பல்வேறு இன, மத மக்களின் ஒத்துழைப்பு இந்த அரசாங்கத்துக்கு இருக்கிறதென்பது உண்மைதான். இந்த ஒத்துழைப்பு நிரந்தரமாக நிலைபெறக் கூடியதாகச் செய்ய வேண்டியது அவசியம். அதில்தான் அதன் வெற்றியும் தங்கியுள்ளது. இதேசமயம் தமிழ்பேசும்மக்கள் தாங்கள் அரசாங்கத்துக்கு அளிக்கும் ஆதரவும் ஒத்துழைப்பும் தற்காலிகமானதென்று அடிக்கடி வெளிவெளியாகச் சொல்லி வருவது தமிழ்பேசும் மக்களுக்கு நன்மையளிப்பதிலும் பார்க்கத் தீமையையே கொண்டுவரக்கூடும். வரவேற்புக் கூட்டமொன்றில் தமிழரசுக்கட்சித் தலைவர் பேசுகையில் அரசாங்கத்துக்கு அளிக்கும் ஒத்துழைப்புத் தற்காலிகமானதென்றும் அரசாங்கம் தமிழ்பேசும் மக்களின் உரிமைகள் சிலவற்றைக் கொடுப்பதற்குச் சம்மதித்துள்ளதென்றும் கூறியிருக்கிறார். அரசாங்கத்தை ஆதரிப்பதற்குக் காரணம் என்னவென்று தங்களைத் தெரிவு செய்த தமிழ்பேசும் மக்கள் கேட்கும்பொழுது தாங்கள் பதிலளிக்க வேண்டியது அவசியம் என அவர்கள் கருதுவதில் நியாயமிருப்பினும் இவ்வித அறிக்கைகளால் தென்னிலங்கையில் தோன்றியுள்ள சாதகமான சூழ்நிலை பாதிக்கப்படக் கூடுமென்பதை தலைவர்களும் பொது மக்களும் சிந்திப்பது அவசியம்.

தமிழ்பேசும் மக்களின் நியாயமான கோரிக்கைகளிலும் உரிமைகளிலும் அநுதாபம் கொண்டிருந்த இடதுசாரிக் கட்சியினரையும் முன்னைய அரசாங்கத் தலைவர்களையும் புதிய அரசாங்கம் அளிக்க முன்வந்துள்ள உரிமைகளுக்கு ஆதரவளிக்க முன்வருவதற்குத் தமிழ்த் தலைவர்கள் முயற்சி செய்வது நல்ல சூழ்நிலையை ஏற்படுத்த உதவலாம். தமிழ் பேசும் மக்களின் உரிமை சம்பந்தமாக உறுதிமொழிகள் அளித்த முன்னைய அரசாங்கத் தலைவர்கள் தமிழ்பேசும் மக்களின் உரிமைகளை எவர் அளித்தாலும் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க இடமிருக்காது. அவர்கள் ஆதரவைப் பெறுவதில் தமிழ்பேசும் தலைவர்கள் வெற்றிபெற்றால் தமிழ் பேசும்மக்களின் வெற்றியாக மட்டுமன்றி நாட்டு ........ நத்துக்கு கிடைத்த வெற்றியாகும்.

## விமானசேவை ஸ்தம்பிதம்!

மாவிட்டபுரம், புதன் பலாலி விமானநிலையத்திற்குக் கொழும்பிலிருந்து காலை 8-45க்கு வழமைபோல வரவேண்டிய 'எயர் சிலோன்' விமானம் இன்று வரவில்லை. இந்த விமானம் கொழும்பிலிருந்து வந்து பலாலி விமானநிலையத்தில் யாழ்ப்பாணப்பிரயாணிகளை இறக்கிவிட்டு இந்தியாவுக்குச் சென்று மீண்டும் திரும்புவது வழக்கம். இந்த விமானம் இன்று வராததால் இந்தியாவுக்குச் செல்லவிருந்த பிரயாணிகளும் கொழும்புக்குச் செல்லவிருந்த பிரயாணிகளும் பெரும் கஷ்டத்திற்குள்ளானார்கள். 'எயர் சிலோன்' அதிகாரிகளுக்கும் ஏற்கனவே விமானம் வரமாட்டாதென்று தெரியாததன் காரணத்தால் அவர்கள் பிரயாணிகளுக்கு எந்தவித தகவலையும் தெரிவிக்க முடியவில்லை.

கொழும்பிலிருந்து அம்பாறை, திருக்கோணமலை மட்டக்களப்பு ஊடாக இன்று காலை 11 மணிக்கு பலாலி வந்துசேரவேண்டிய விமானமும் வரவில்லையெனத் தெரியவருகிறது.

விமான ஓட்டிகள் லீவு எடுத்ததன் காரணமாகவே தங்கடை ஏற்பட்டுள்ளதென்று விசாரித்தபோது கூறப்பட்டது. சேவையில் நாளை சீர்திருத்தம் ஏதும் ஏற்படுமோ எனவும்தெரியவில்லை. புதுவருஷப்பிறப்புக்குப் பின்னர் பிரயாணம் செய்யப் பலாலி விமானநிலையத்துக்கு வந்திருந்த பலர் ஏமாற்றத்துடன் வீடு சேர்ந்தனர். விமானிகள் வேலை நிறுத்தம் செய்வதாகப் பிரயாணிகள் மத்தியில் வதந்தி நிலவியது.

# சீரணிநாகம்மாள் ஆலய வரலாறு

### இன்று ரதோற்சவம்

ஈழத்தில் சைவசமய வளர்ச்சிக்கும் பண்பாடுக்கும் எவ்வாறு திருக்கேதீச்சரமும் திருக்கோணேஸ்வரமும் அமைந்திருக்கின்றதோ அதேபோன்று தேவி வழிபாட்டிற்கு யாழ்ப்பாணத்தில் நயினை, சீரணி நாகபூஷணியம்மை ஆலயங்கள் விளங்குகின்றன.

யாழ்ப்பாணம் காரைநகர் வீதியில் சண்டிருப்பாய் - சீரணிச் சந்தியிலிருந்து சுமார் 60 யார் தூரத்தில் சீரணி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கோவில் சகல சிறப்புக்களும் பொருந்த அமைந்துள்ளது. தம்மைப் பூசித்த நாகமொன்றை திருமேனியுள் அணிந்த காரணத்தால் இத்தேவியும் நாகபூஷணியம்மை என்று அழைக்கப்படுகிறர்

சண்டிருப்பாய் கனகாம்பிகை ஐயரின் மகன் முருகேசபிள்ளை என்பவர் சிறு பிராயம் தொட்டு கடவுள் வழிபாடுகளைச் செய்து வரலாயினர் அப்பொழுது சண்முகம் பொன்னம்பலம் என்ற ஒருவரும் இருந்தார் இவருடன் இராமு முத்தர் என்பவரும் வசித்து வந்தார்கள் சண்முகம் பொன்னம்பலம் ஒரு யந்திரம் வைத்து பூசை செய்து சாத்திரம் சொல்லி வந்தார் சில காலம் உரிய முறையில் யந்திரத்தை பூசிக்காததால் அவர் வீட்டில் சில துர்ச்சகுனங்கள் நிகழ்ந்தன அவை முத்தருக்கு பிடிக்காமையால் ஒரு நாள் யந்திரத்தை பெட்டியுடன் எடுத்துச் சென்று ஒரு அல்லிப்பூம்பற்றைக்குட் போட்டுச் சென்றுவிட்டார் பின்னர் நாகபூஷணியம்மை பல அன்பர்களின் கனவில் தோன்றி தம்மை ஆதரிக்குமாறு கூறி மறைந்தருளியதாகவும் அங்குள்ளவர்கள் வறியவர்கள் ஆகையால் எவ்விதம் ஆதரிக்க முடியும் எனக் கவலைகொண்டிருக்கையில் குறித்த அன்பராகிய முருகேசம்பிள்ளைக்கு நாகபூஷணி கனவிலே தோன்றி பல முறைகளிலும் திருவருட்தன்மைகளைக் காட்டி தம்மை ஆதரிக்கும்படி கூறி அருளினர் எனவும் கதையொன்று உண்டு

1896 விளம்பி வருடம் சித்திரைமாதம் பௌர்ணமி தினத்தன்று மீண்டும் அம்பாள சொப்பனத்தில் தோன்றி அன்பனே நாம் வெளிப்பட்டு உனக்கு சொன்னவைகளை உண்மை என்று சிந்தித்தாயில்லை உமது மனம் பனித முழும்வண்ணம் ஒரு மந்திரம் உபதேசம் செய்வோம்' என்று கூறி மந்திர உபதேசமும் புரிந்து மறைந்தருளினர்

இதன் பின்னர் 1896-ம் வருடம் ஆடி மாதம் திங்கட்கிழமையும் அமாவாசையும் கூடிய புண்ணிய தினத்தில் ஒரு மண்டபம் அமைக்கப்பட்டுகம் நவரது பூசையை பத்திசிரத்தையேடு அவ்வன்பர் நடாத்தி வந்தார் இதன் பின்னர் பல பகுதிகளிலிருந்தும் அடியார்கள கூட்டம் கூட்டமாகவந்து நாகபூஷணி அம்மையை வழிபடத்தொடங்கினர் தீராத நோய்களினால் வருந்தினோர் தலத்தை அடைந்து தேவியை வழிபட்டுத் தீராத தம் நோய்கள தீரப்பெற்றனர்

தற்பொழுது சண்டிருப்பாய் சீரணி நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தின் திருப்பணி சபை காரியின் தொண்டுகளை செவ்வனே செய்துவருகின்றது! ஏப்ரல் 6ம் திகதி கொடியேற்றம் ஆரம்பமகி இன்று சீரணி ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேர் உற்சவம் நடைபெறுகிறது.

# "சமயஉண்மைகளை விளக்கும் அறிஞர் தோன்றவேண்டும்"

### ஞானப்பிரகாசர் குருபூசை விழாவில்பேச்சு

யாழ்ப்பாணம், வியாழன் "சமய உண்மைகளை மற்றவர்களுக்கு விளக்கக்கூடியவர்கள் தோன்றவேண்டும்" என்று ஸ்ரீஞானப்பிரகாச முனிவர் குருபூசை விழாவில் பேசிய திரு. கு. அம்பலவாணர் கூறினர்.

ஸ்ரீஞானப்பிரகாச முனிவர் குருபூசை சென்ற சனிக்கிழமை மாலை முதலியார் செ. முத்துத்தம்பி தலைமையில் நடைபெற்றது.

தலைவர் தமது உரையில் கூறியதாவது:-

'ஆறுமுகநாவலர், சேர் பொன் இராமநாதன், ஞானப்பிரகாச சுவாமிகள் ஆகிய மூவரும் இலங்கையிலுள்ள மிகச் சிறந்த பெரியார்களாகும். இராமநாதனும் நாவலரும் ஒரே காலத்தவர்கள். ஞானப்பிரகாசர் இவர்கள் காலத்திற்கு முற்பட்டவராவர்; ஞானப்பிரகாசர் காலம் சைவ உலகில் இருண்டகாலமாகும். போர்த்துக்கீசர்கள் வியாபாரத்திற்காக வந்து தங்கள் மதத்தைப் பரப்பியதோடு நாட்டையும் கைப்பற்றினர் அவர்கள் பைபிளும் வாளும் கொண்டு மதத்தைப் பரப்பியது கிறிஸ்துநாதரின் கொள்கைக்கே முரணானதாகும். நமது முன்னோர்கள் அந்நியரின் துன்பத்தையும் பொறுத்துக்கொண்டு சமயத்தை வளர்த்தனர் போர்த்துக்கீசர் உண்பதற்குச் சில சைவர்களே பசுமாடுகளைக் கொடுத்தார்கள். அந்நியர்களுக்குப் பசுமாடு .......... கொடுப்பதை மறுத்த .......... .......... .......... சர் துறவியானர். பொருளற்றவர்கள் துறவியாகலாம். ஆனல் பெருநிருந்தும் துறவியான இவருடைய துறவே உண்மைத் துறவாகும். பசு கொடுத்தவர்களின் பெயர்கள் மறைந்துவிட்டன, பசு கொடுக்க மறுத்த ஞானப்பிரகாசரின் பெயர் நிலைசிற்கின்றது இலங்கை விட்டுச்சென்ற முனிவர் முதலில் திருவாவடுதுறையருகு முத்தியடைந்த பூம்புலா என்ற இடத்தை அடைந்து பின்னர் சிதம்பரம் சென்று அங்கு தேவியின் அருள்பெற்று வங்காளம் சென்று அங்கே பிராமணப் பிள்ளைகளுக்குக் கற்பித்துக் கொண்டிருந்த பிராமண சந்நியாசியின் பெருமதிப்பைப் பெற்றுச் சமஸ்கிருதத்தை ஒரு வருடத்தில் நன்கு கற்று அம்மொழியில் ஒன்பது நூல்களை எழுதியுள்ளார் தமிழில் சிவஞானசித்திய ருக்கு உரை எழுதியுள்ளார். சிதம்பரத்தில் இன்றும் அவருடைய பெயருடன் ஒரு குளமும் மடமும் இருக்கின்றன. இவர் பிறப்பிடம் யாழ்ப்பாணத்திலுள்ள திருநெல்வேலியாகும் இப்பெரியாரின் திருநாளைக் கொண்டாடுவதன் மூலம் அவரைப் போல வாழ முயற்சி செய்யவேண்டும்',

குமாரசுவாமிப் புலவரின் மகன் திரு. அம்பலவாணர் பேசும்போது குறிப்பிட்டதாவது:

"தம்மளவில் சமயப்பற்றுடையவர்கள் பலர் இருக்கின்றனர். ஆனல் மற்றவர்களுக்குச் சமய உண்மைகளை விளக்குகிறவர்கள் பலர் தோன்றவேண்டும், யாழ்ப்பாணத்தில் தோன்

(6-ம் பக்கம் பார்க்க)

## நாடும் நடப்பும்

"2000 வருடங்களுக்கு மேலாக சிங்கள ராஜ்யமாக இருந்த நாட்டின் ஒரு பகுதியான மலைநாட்டில இந்தியத் தமிழர்களுக்கென ஒன்றுக்கு மேற்பட்ட அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் தொகுதிகளை அமைப்பதற்கு தமிழர்களுக்கு யு. என். பி - சமஷ்டி அரசாங்கம் வாக்குறுதி அளித்துள்ளது. இதன்படி இந்தியத் தமிழர்களுக்கென மலைநாட்டில் பத்துத் தொகுதிகள் கிடைக்கும். ஒவ்வொரு தொகுதியும் ஒரு சிங்களவரையும் ஒரு தமிழரையும் பார்லிமெண்டுக்குத்தெரிவு செய்து அனுப்பும் இத்தொகுதிகளிலுள்ள இந்தியர்களின் பெயர்களை அந்தந்தத்தொகுதி வாக்காளர் பட்டியலில் சேர்த்துக்கொள்வதென்று திரு. தொண்டமானுக்கு திரு டட்லி சேனநாயகா வாக்குறுதியளித்திருக்கிறார்" என்று கொழும்பிலிருந்து வெளிவரும் 'ஜனசத்திய' (ஜனசக்தி) என்னும் வாராந்தப் பத்திரிகை இம்மாதம் 11-ந்திகதி வெளியான இதழின் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்தில் ஒரு செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த ஏற்பாடு இங்குள்ள தமிழ்த் தலைவர்களுக்கு பெரும் சாதகமாக உள்ளதென்றும் பார்லிமெண்டில் இந்தியர்களின் பிரதிநிதிகள் அதிகரித்துவிடுமென்றும் அந்தப் பத்திரிகை எழுதுகிறது.

'ஜனசத்திய' ஒரு முற்போக்கு வாரப்பத்திரிகையாம். எப்படி நமது முற்போக்கு.

ஃ ஃ ஃ

இப்போது ஒவ்வொருவருடைய கல்லீரலிலும் டி.டி.டி. மருந்து தங்கியுள்ளது என்று பிரிட்டிஷ் ஆசிரியையான எல்ஸபெத் ஹக்ஸ்லி கூறியிருக்கிறார். ரசாயனத் தெளிப்பான்மருந்துகள் அதிக அளவில் பயன்படுத்தப்படுவதன் காரணமாகவே இப்பிரச்னை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவிக்கிறார். புதிய புத்தகம் எழுது விஷயங்களைச் சேகரிப்பதற்காக ஆஸ்திரேலியாவில் நான்கு மாத சுற்றுப்பிரயாணம்மேற் கொண்டுள்ள ஹக்ஸ்லி, இத்தெளிப்பான் மருந்துகள் மண் சாரத்தில் கலக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. எதிர்காலத்தில் இவை என்ன விளைவை ஏற்படுத்தும் என்றும் தெரியவில்லை' என்கிறார். மனிதரிடம் மட்டும்மல்ல கரையிலிருந்து 100 மைல் தூரத்தில் பிடிக்கப்படும் மீன்களின் கல்லீரலிலும் டிடிடி காணப்படுகிறதாம்!

நம் நாட்டில்பயிர்களிலுள்ள புழுபூச்சிகளை அழிக்க வந்த 'கிருமிநாசினி' ஏற்கனவே பல உயிர்களைப் பலிகொண்டுவிட்டது. இன்னும் சரியாக ஆராய்ச்சி செய்தால் ஹக்ஸ்லி கண்டுபிடித்துள்ளதை விட விசித்திரமான தகவல்கள் கிடைக்கலாம்.

ஃ ஃ ஃ

குடும்பக்கட்டுப்பாடு விஷயத்தில் தவறான முறையைப் பின்பற்றினல் அதனுல் ஆத்மீகரீதியிலும் மனேநிலை சம்பந்தமாகவும் தொடர்ச்சியாக பல தொல்லைகள் ஏற்படும் என்று மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த மனேவியாதிசிகிச்சை நிபுணர் டாக்டர் மேடர் எச்சரித்திருக்கிறர்' குடும்பக்கட்டுப்பாட்டை நியாயமானவழியில் அனுஷ்டிக்காவிட்டால் அது மனக்கோளாறை உருவாக்கும் தன்மையுடையதாகத்தான் இருக்கும் என்கிறர் அவர்

புதுவருடத்தில் ஜனன விகிதம் அதிகரிக்கும் என்ற சோதிடத்தைக் கண்டு அஞ்சுபவர்கள் இந்த நிபுணரின் எச்சரிக்கையையும் கருத்தில் கொள்வது நல்லது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அயூபின் ரஷ்ய விஜயம்: தோல்வி என்கிறது யு. எஸ். பத்திரிகை

வாஷிங்டன், ஏப்ரல் 14
பாகிஸ்தான் அதிபர் அயூப் கானின் ரஷ்ய விஜயம் முக்கிய விஷயங்களில் ரஷ்ய நிலையை ஒரு சென்டிமீட்டர்கூட மாற்றவில்லை என வாஷிங்டன் போஸ்டின் மாஸ்கோ நிருபர் கூறினர்.

காஷ்மீர் பிரச்னையில் இந்தியாவுக்கு ரஷ்ய ஆதரவைத் தளர்த்துவது அயூப் விஜயத்தின் முக்கிய நோக்கம் எனக் கருதப்பட்டது. இதில் அயூப் தோல்வியுற்ருர் எனப் "போஸ்ட்" கூறியது.

21 பீரங்கிக்குண்டுகள் உட்பட தனக்கு முழுக் கௌரவம் அளிக்கப்படவில்லை என அயூப் மனத்தாங்கல் அடைந்ததாக அது கூறியது. விமான நிலையத்தில் வரவேற்புரை கூட்டப்படாதது அவருக்கு எரிச்சலை உண்டாக்கியதாம்.

தன் மாஸ்கோ விஜயத்தில் உலக ராஜதந்திரத்தின் மத்திய கேந்திரத்தில் பிரவேசிக்க அயூப் மனப்பால் குடித்ததாக அமெரிக்க ராஜதந்திரிகள் கூறினர்கள்.

மாஸ்கோவில் அயூப் தன் அரசியல் நோக்கங்களை அடையவில்லை என்ற வாஷிங்டன் போஸ்ட் மதிப்பீட்டை 'பால்டிமோர்சன்' பத்திரிகையின் மாஸ்கோ நிருபர்கள் ஊர்ஜிதம் செய்தார்.

"காஷ்மீர் விஷயமாக ரஷ்ய நிலைமையில் மாறுதலையும், இந்தியாவுடன் ரஷ்ய உறவுப் பிணைப்பைத் தளர்த்தவும் அயூப் நாடினர். சீனவை எதிர்த்து இந்தியா பாதுகாப்புப் பெற ரஷ்யா ஆயுதமளிப்பதையும் அவர் எதிர்த்தார். ஆனல் மாஸ்கோவின் அயூபுக்கு ஆதரவு கிடைக்கவில்லை" எனசன் கூறியது.

ஆசியாவில் இந்தியா ஒன்று தான் தன்னுடையகம்யூனிஸ்ட் அல்லாத நண்பன் என ரஷ்யா கருதுகிறது. ஆகவே அதனுடன் நல்லுறவைக் கெடுத்துக்கொள்ள ரஷ்யா விரும்பவில்லை என்றுமசன் கூறியது.

# கட்ச் பகுதியில் அமைதி
## பாகிஸ்தான் புதிய துருப்புகளை கொண்டு வந்திருக்கிறது

புதுடில்லி, ஏப்ரல் 14
குஜராத்தில் கட்ச் பகுதியில் சென்ற திங்கட்கிழமை முதல் அமைதி நிலவுவதாக புதுடில்லிக்குக் கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன' திங்கட்கிழமை பிற்பகல் கஞ்சர்கோட பகுதியில் பாகிஸ்தானியர் சிறிதுநேரம் சுட்டனர்,

இந்தியா தாக்குதல் நடத்தியபோது 2 டாங்கிகளை நாசமாக்கிவிட்டதாயும், மற்றும் 4 டாங்கிகளை அழித்துவிட்டதாயும் பாகிஸ்தான் கூறுவது வெறும் பொய் என்றும் திங்கட்கிழமை இந்தியா தாக்குதல் எதையும் நடத்தவில்லை என்றும் கூறப்பட்டது.

ராஜஸ்தானில் பாதுகாப்பு ஏற்பாடுகள் திருப்திகரமாய் இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

பாகிஸ்தான் கஞ்சர்கோட் பகுதியில் தனது நிலைமையைப் பலப்படுத்த மேலும் துருப்புகளைக் கொண்டுவந்திருப்பதாயும் எந்த நிலைமையையும் சமாளிக்க ஆயத்தமாய் இருப்பதாயும் கராச்சி ரேடியோ அறிவித்தது.

தென்கிழக்காசிய தலைவிதியை

# ரஷ்யாவும் அமெரிக்காவும் மட்டும் நிர்ணயிக்க முடியாது
## சீன இதை அனுமதிக்காது என பிரதமர் சூ அறிவிப்பு

பீகிங், ஏப்ரல் 14
தென்கிழக்காசியாவில் அமைதியை ஏற்படுத்தும் விஷயத்தில் ரஷ்யாவும் அமெரிக்காவும் மட்டும் பேச்சு நடத்துவதை சீன அனுமதிக்காது என சீனப்பிரதமர் சூ-என்-லாய் கூறியிருக்கிறர்.

நேபிளிய பத்திரிகை ஒன்றுக்கு சூ-என்-லாய் பேட்டியளித்தார்.

ரஷ்ய ஆயுதங்கள் வடவியட்னுமுக்குச் செல்வதை சீன சோதனையிடுவதற்குக் காரணம் அங்கு ராக்கெட்டுகள் செல்கின்றனவா என்பதை ஆராயவே என்றும் ராக்கெட்டுகள் அங்கு சென்ருல் சோவியத் தொழில் நுட்ப நிபுணர்களும் செல்லக்கூடும் என்றும் இறுதியில் ரஷ்யத் துருப்புகள் அங்கு செல்லக்கூடும் என்றும் திரு. சூ கூறினர். சீன இதை அனுமதிக்க முடியாதுனன்று கூறினர்.

வியட்னும் பிரச்னையில் ஐ. நா. பொதுக் காரியதரிசி யுதாண்ட் உருப்படியாக எதுவும் செய்யக்கூடிய நிலையில் இல்லை என்றும் அவர் கூறினர்.

---

## 27 பேர் பலி

விஜயவாடா, ஏப், 14
ஆந்திரபிரதேசத்தில் அமலாபுரம் அருகே நடைபெற்ற படகு விபத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை இப்போது 27 ஆக அதிகரித்திருக்கிறது.

## சென்னைக்கு தண்ணீர் போதாது

சென்னை, ஏப். 14
சென்னை நகரிலுள்ள 20 லட்சம் மக்களுக்கும் தற்போது தினசரி விநியோகிக்கப்படும் 8 1/2 கோடி கலன் தண்ணீர் போதாதென்றும் தற்போது ஒரு ஆளுக்கு சராசரி 17 1/2 கலன் தண்ணீர் விநியோகிக்கப்படுவதாயும், இதை 50 கலனுக்க வேண்டும் என்றும், தினசரி 10 கோடி கலன் தண்ணீர் விநியோகிக்கப்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## 30 தமிழ் பெயர்ப்புகள்

சென்னை, ஏப். 14
நேற்று தமிழ்ப் புதுவருடத்தை முன்னிட்டு 30 ஆங்கில நூல்களின் தமிழ் மொழி பெயர்ப்புக்களை அண்ணாமலை பல்கலைக் கழக உபவேந்தர் டாக்டர் ஸி. பி. ராமஸ்சாமி ஐயர் வெளியிட்டுவைத்தார். அப்போது அவர் பேசுகையில் மொழிபெயர்ப்பு ஒரு மொழியை வளர்க்கும் எனக் கூறினர்.

தமிழ் வெளியீட்டு ஸ்தாபனம் இந்த நூல்களை மொழி பெயர்த்தது. இதுவரை 116 புத்தகங்களை அது வெளியிட்டிருக்கிறது.

## 'ஊசி சாம்பியன்'

மான்செஸ்டர், ஏப் 14
கம்பளம் தைக்கும் ஊசிக்கண்ணில் 1171 நூல் இழைகளைச் சொருகி தனது அகில உலக ஊசி சாம்பியன் பட்டத்தைப் பாதுகாத்துக்கொண்டார். 24 வயதான லண்டன் வாசி ஸ்ரீடோனி நார்ட்டன் 2 மணிநேரம் அமைதியாகப் போராடி அவர் இந்தச் சாதனையை நிலைநாட்டினர்.

## காஞ்சிபீடாதிபதிக்கு கனகாபிஷேகம்

சென்னை, ஏப்ரல் 14
வஸந்த நவராத்திரி முடிவில் காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகளுக்குக் கனகாபிஷேகம் நடந்ததை ஏராளமான ஆஸ்திகர்கள் தரிசித்தனர்.

புதுப்பெரியவர் ஸ்ரீஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் கனகாபிஷேகத்தை நடத்தினர், காஞ்சி ஸ்ரீகாமாட்சியம்மன் திருவுருவம் பொறித்த பொற்காசுகளைக்கொண்டு புதுப்பெரியவர் கனகாபிஷேகம் செய்தார், காசுகள் 14 காரட்தங்கம்.

ஸ்ரீசந்திர மௌலீசுவரருக்கும் ஸ்ரீதிரிபுரசுந்தரிக்கும் காலைப்பூஜை நடந்தது. ஸ்ரீராமநவமியையொட்டி 9 நாட்களாக ஹோமத்தில் வைத்திருந்த கலசங்களிலிருந்த புனிதநீரைக்கொண்டு ஸ்ரீராமபிரான் அபிஷேகம் நடந்தது. பின்பு ஸ்ரீஜயேந்திர சரஸ்வதி புண்ணிய தீர்த்தங்களுடன் பொற்காசுகளிட்டு வைத்திருந்த கலசங்களிலிருந்து பயபக்தியுடன் ஸ்ரீ ஆச்சார்ய பகவானுக்கு கனகாபிஷேகம் செய்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. ஆச்சார்யாருக்கு ஆஸ்திகர்கள் பூமாலை சமர்ப்பித்தனர்.

பொற்காசுகளிலிருந்து கிடைக்கும் வருமானம் காஞ்சி காமாட்சியம்மன் கோவில் திருப்பணிக்குப் பயன்படுத்தப்படும்.

## 'மீகாங்பிதா' நரசிம்மன்

வாஷிங்டன், ஏப்ரல் 14
தென்கிழக்காசியாவுக்கு ஜனதிபதி ஜோன்ஸன் திட்டத்தின் பொருளாதார அம்சங்கள் குறித்து திரு. சி. வி. நரசிம்மனின் ஆலோசனையை ஐ. நா. காரியதரிசி யுதாண்ட் பெரிதும் நம்பியிருப்பாரென 'நியூயோர்க் டைம்ஸ்' கூறியது.

ஸ்ரீரங்கத்தில் பிறந்தவரும் ஐ. நா. காரியதரிசியின் பிரதம நிர்வாகியுமான 50 வயதுள்ள நரசிம்மன் மீகாங்நதிப் பிரதேச அபிவிருத்தித்திட்டத்தை அமுலாக்க உதவியவரெனப் பத்திரிகை குறிப்பிட்டது. 'மீகாங் பிதா' என்ற செல்லப் பெயர் அவருக்கு ஏற்பட்டது. ஆனல் தன்னைப் 'பிள்ளைப் பேறு மருத்துவப்பெண்' என்றழைப்பதே பொருத்தமென நிருபர்களிடம் திரு. நரசிம்மன் கூறினர். வியட்னுமில் அரசியல் தீர்வுக்கான பேச்சுகளில் அவர் முக்கிய பங்கு வகிப்பாரென எதிர்பார்க்கலாமென்றும் நியூயோர்க் டைம்ஸ் கூறியது.

## கம்பராமாயணம் கொளுத்தப்பட்டது

திருச்சி, ஏப்ரல் 14
திராவிடக் கழகத் தொண்டர்கள் கடந்த 10ம் தேதி காந்தி மார்க்கெட்டுக்கருகில் கம்ப ராமாயணம் என எழுதப்பட்ட காகிதங்களைக் கொளுத்தினர். தொண்டர்கள் கறுப்புச்சட்டை அணிந்திருந்தார்கள். ஸ்ரீராமநவமியன்று இம்மாதிரி நடத்தத் திராவிடக் கழகத் தலைவர் பெரியார் ராமசாமி நாயக்கர் ... இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

# ஷேக்கிற்கு பாக். காஷ்மீர் தலைவர் அழைப்பு

ராவல்பிண்டி, ஏப், 14
சுயநிர்ணய உரிமை லட்சியத்தை அடையத் தம்முடன் சேரும்படி ஷேக் அப்துல்லாவுக்கு பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீர் அரசாங்க அதிபர் அப்துல் ஹமீத்கான் அழைப்பு விடுத்துள்ளார்.

அப்துல்லாவின் பாஸ்போர்ட்டை ரத்துச் செய்து விடுவதென்று இந்திய அரசாங்கம் முடிவு செய்திருப்பதால் அப்துல்லாவுக்கு அந்த அழைப்பை விட்டிருப்பதாக நிருபர்களிடம் அவர் கூறினர்.

அவர் எந்த ஹோதாவில் வரவிரும்பினும் அந்த ஹோதாவில் ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிறேம் என்றும் அவர் கூறினர்.

ஷேக் அப்துல்லாவிற்கும் பீர்ஸா அப்ஸலை பெய்க்குக்கும் பாஸ்போர்ட் வழங்குவதென பாகிஸ்தான் அரசாங்கம் தீர்மானித்து விட்டதாக உத்தியோகத் தொடர்புள்ள பாக். பத்திரிகை ஸ்தாபனம் டாஷ்கண்டிலிருந்து வந்த செய்தி ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

## ஸ்ரீமதி பண்டிட்

புதுடில்லி, ஏப், 14
எல்லா தேசிய மொழிகளுக்கும் சமமான மரியாதை கொடுக்கவேண்டுமென ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் கூறினர்.

## துங்கு ரஹ்மான்

கோலாலம்பூர், ஏப், 14
பிரிட்டனுடனை பாதுகாப்பு ஒப்பந்தத்தை மலேஷியா புறக்கணிக்க முடியாது என பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் கூறினர்.

தங்களிடம் 20000 துருப்புக்கள்மட்டுமே இருப்பதாயும், இது போதாது என்றும் அவர் கூறினர்.

மலேஷிய தீர்வுக்கு மேலான வாய்ப்பு இருப்பதாக இந்தோனேஷிய வெளி மந்திரி டாக்டர் சுபந்திரியோ கூறியதை அவர் வரவேற்று, சமாதானத்தில் நாட்டம் இருந்தால் இந்தோனேஷியா தன் துருப்புகளை வாபஸ் பெற்று சமூக சூழ்நிலையை உண்டாக்க வேண்டும் என்றும் துங்கு கூறினர்.

## வியட்னுமில் மீண்டும் தாக்குதல்

சைகோன், ஏப், 14
அமெரிக்க கடற்படை விமானங்கள் நேற்று முதல் தடவையாக வியட்காங் இலக்குகளைத் தாக்கின.

அமெரிக்க போர் விமானங்களும், தென்வியட்னும் விமானங்களும் வடவியட்னுமில் இரு ரடார் நிலையங்களைத் தாக்கி, ஒரு ரயில்-சாலைத் தொடர்பை நாசம் செய்ததாக அறிவிக்கப்பட்டது.

17 வது அட்சரேகைக்கருகே நடைபெற்ற ஒரு தாக்குதலில் 32 அரசாங்கத் துருப்புக்கள் பலியாகின, 20 பேர் காயம் அடைந்தனர்.

## சாஸ்திரி

புதுடில்லி, ஏப். 14
மே மாதம் 30ம் திகதி இந்தியப் பிரதமர் திரு சாஸ்திரி கனடாவுக்குச் சென்று 2 தினங்கள் தங்குவார்.

ஜூன் 2ம் திகதி அவர் வாஷிங்டன் வந்து அமெரிக்காவில் ஒரு வாரம் தங்குவார். 8ம் திகதி தாயகம் திரும்புவார்.

ஜனதிபதி ஜோன்ஸனுடனும். இதர அமெரிக்க அதிகாரிகளுடனும் அவர் பேச்சுவார்த்தை நடத்துவதுடன் கொலம்பியா பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவிலும் கலந்துகொள்வார்.

## அமெரிக்காவில் வில்சன்

லண்டன், ஏப். 14
பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றார். 2 நாள் தங்கும் அவர் ஜனதிபதியுடன் வியட்னும் பிரச்னைபற்றி ஆலோசனை நடத்துவார்.

## ஜப்பானின் புகார்

டோக்கியோ, ஏப். 14
ஜப்பானின் உள்நாட்டு விவகாரத்தில் சீன குறுக்கீடு செய்வதாயும், பீகிங் ரேடியோவில் ஜப்பானிய எதிர்ப்புப் பிரசாரம் செய்யப்படுவதாயும் சீனப் பிரதமரிடம் இதுபற்றி ஆலோசனை தெரிவிக்கப்படுமென்றும் அறிவிக்கப்படுகிறது.

## சியோலில் ஆர்ப்பாட்டம்

சியோல், ஏப்ரல் 14
தென்கொரியத் தலைநகரில் நேற்று ஆயிரக்கணக்கான மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்ததன் விளைவாக 330 மாணவர்களும் 9 சிவிலியன்களும் கைதுசெய்யப்பட்டனர். கைகலப்பில் ஒரு மாணவரும் 49 பொலிசாரும் காயமடைந்தனர்.

## சீன ஆட்சேபம்

பீகிங், ஏப்ரல் 14
சீனமீது நேற்று அமெரிக்க விமானம் ஒன்று பறந்தது குறித்து பீகிங் நேற்று ஆட்சேபம் தெரிவித்தது.

## ஹாலந்தில் கலப்பு அரசாங்கம்

ஆம்ஸ்டர்டாம், ஏப்ரல் 14
ஹாலந்தில் இருவார அரசியல் நெருக்கடிக்குப்பின் மூன்று கட்சி கலப்பு அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டது.

## ஆலய பரிபாலனசபை

அதிபுரம், புதன்
பண்ணாகம் தெற்கு விசவத்தனை முருகமூர்த்தி கோவில் பரிபாலனசபை வருடாந்தப் பொதுக்கூட்டம் கோவில்முன்றலில் திரு. செ. ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர், தலைவர் திரு. செ. ஸ்ரீநிவாசன், காரியதரிசி- பண்டிதர் ஆ. ஆறுமுகம், தனதிகாரி வ. இராமலிங்கம், நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## ஜாலியன்வாலாபாக் நினைவுதினம்

புதுடில்லி, ஏப். 14
ஜாலியன்வாலாபாக் தினம் நேற்று டில்லி, பாட்னா உட்படப் பல நகரங்களில் கொண்டாடப்பட்டது. ஜாலியன் வாலாபாக்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 15,000 பேர் கலந்துகொண்டனர்.

## மகாவீர் ஜயந்தி

புதுடில்லி, ஏப்ரல் 14
மகாவீர் ஜயந்தி நேற்று ஆரம்பமானது. 4 தினங்களுக்குத் தொடர்ந்து இது நடைபெறும்.

## கண்டனத் தீர்மானம் தோல்வி

லண்டன், ஏப்ரல் 14
டி. எஸ். ஆர். 2 விமானங்களைப் பிரிட்டன் ஒழிக்கத் தீர்மானித்திருப்பது குறித்து, டோரி கட்சி கொண்டுவந்த கண்டனத்தீர்மானம் நேற்று காமன்ஸ்சபையில் 21 வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச்சங்க

# பிரவேச, பாலபண்டித பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், வியாழன்
யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாஷா விருத்திச்சங்கம் 1965 பெப்ரவரியில் நடத்திய பிரவேச, பாலபண்டிதபரீட்சை முடிவுகள் வருமாறு:

### பிரவேசப் பரீட்சை தமிழ்

பூரணசித்தி: மு. வெள்ளைச்சாமி, புசல்லாவை, சா. ஜெகதாம்பிகை, சாவகச்சேரி. சோ பவானி, சாவகச்சேரி. மூ. புவனேஸ்வரி, க. கண்மணி, வாணிகழகம், கைதடி.

நூனசித்தி: இரண்டாம் பாடவகை சி மகாலிங்கம், வாணிகழகம், கரவெட்டி.

நாலாம் பாடவகை: க. விநாசித்தம்பி, கொடிகாமம். ச. முக்கன், புசல்லாவை, பொ சூரிய பகவதிதேவி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். ப. விமலா, நுணாவில். வி. செல்வமலர், நுணாவில். க. பத்மினிதேவி, வாணிகழகம், கைதடி. மா. ஜெகதாம்பாள், புசல்லாவை. அ. இராசலட்சுமி, வாணிகழகம், கைதடி.

### பாலபண்டித பரீட்சை தமிழ்

பூரணசித்தி: க. உமாமகேஸ்வரபிள்ளை, விளிசிட்டி. க. செல்வநாயகம்பிள்ளை, இணுவில். சி. கார்த்திகேசு, யாழ்ப்பாணம், க. நமசிவாயம், கரணவாய். க. கதிரவேலு, கொக்குவில். ச. பரமேஸ்வரி, உரும்பராய். வி. சரஸ்வதிப்பிள்ளை, மீசாலை. சி. சிவமணி, கைதடி. த தங்கமணி, வாணிகழகம், கரவெட்டி. க. இரத்தினம், ஏழாலை. க சமனுவதி, தெல்லிப்பழை. க பங்கையச்செல்வி, வண்ணார்பண்ணை,

நூனசித்திபூர்த்திசெய்தோர் இரண்டாம் பாடவகை செ அலெக்ஸ்சாடர், யாழ்ப்பாணம் த சுவாமிநாதன், மலவத்தகம ஸ்ரீரங்கம் அப்புத்துரை, இளவாலை சி யோகம்மா, யாழ்ப்பாணம்

முதலாம் பாடவகை சி வன்னியபிள்ளை, கைதடி.

நாலாம் பாடவகை அ. பராசம்மா, ஊர்காவற்றுறை.

### பாலபண்டித பரீட்சை சமஸ்கிருதம்

பூரணசித்தி: கு சிதம்பரநாதசர்மா, காரைநகர். பா அருணசலம், சங்கானை.

நூனசித்தி: இரண்டாம் பாடவகை க மாணிக்கவாசகர், கரணவாய் வே குமாரசாமி, நுணாவில் தி பொன்னம்பலவாணர், சுழிபுரம் சி புனிதவதி, காரைநகர் வ சிவபாக்கியம், கோப்பாய் சி இராசேஸ்வரி, யாழ்ப்பாணம் நாகணேஸ்வரி, காரைதீவு (கி மா).

மூன்றும் பாடவகை க கனகசபாபதி, மீசாலை ஆ யோகாம்பிகை, மண்டைதீவு.

### பிரவேசப்பரீட்சை சமஸ்கிருதம்

பூரணசித்தி: கி, சதாசிவசர்மா, மட்டுவில் க மகேஸ்வரசர்மா, மட்டுவில்.

நூனசித்தி: நாலாம் பாடவகை கா ஸ்ரீதரன், ஆனைக்கோட்டை, வை விருத்தகிரீசசர்மா, அச்சுவேலி.

## ஈசாபகதைகளின மிகப்பழைய புத்தகம்

நியூயோர்க், ஏப். 14
ஈசாப் கதைகளைக் கொண்ட மிகப் பழைய புத்தகம் ஒன்று இங்குள்ள மோர்கன் நூலகத்தில் இடம் பெற்றுள்ளது.

புதிதாக சேகரிக்கப் பட்டுள்ள இச்சிறு புத்தகம் 9-ம் நூற்றுண்டில லத்தின் மொழியில் கையால் எழுதப்பட்டதாகும். பொதுமக்கள பார்வைக்கு இப்போதுதான் அது முதல் தடவையாக வைக்கப் பட்டிருக்கிறது.

ஈசாப் கதைகளைக் கொண்ட மிகப்பழைய புத்தகம் என முன்பு கருதப் பட்டதும், கையால் எழுதப்பட்டதுமான கிரேக்க மொழிப் புத்தகத்தைக்காட்டிலும் இது 100 வருடங்கள் முந்தியது.

ஏசுநாதர் காலத்தில் வாழ்ந்தவரும், ரோமாபுரிச் சக்கரவர்த்தி அகஸ்டஸ் மூலம் விடுதலை பெற்றவருமான பீட்ரஸ என்னும் கிரேக்க அடிமை இக்கதைகளை எழுதிவைத்தார். மன்னருக்காக அவர் தனது கதைகளை எழுதினர். ஆனால் மூலப்பிரதி தொலைந்து விட்டது. வரலாற்று மத்திய காலத்தில் ஈசாப கதைகளில் 18 பதிப்புக்கள் பல்வேறு ருபங்களில் பல்வேறு மொழிகளிலும் வெளிவந்தன.

அக்கதைகளில் பெரும்பாலானவை முடிவில் நீதிக் கருத்து கொண்டவை. அடலை மன்னர் காலத்திலிருந்து அவை குழந்தைகளுக்குச் சொல்லப் படும் கதைகளாக இருந்து வருகின்றன.


## திருப்பதி உண்டியல் அதிசயம்

திருமலை, ஏப். 14
திருமலை ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் உண்டியலில் தனது சுவோதரி மோதிரம் ஒன்றைக் காணிக்கையாகச் செலுத்தியதைக் கண்ட ஐந்து வயதுச் சிறுமிபொருக்தி தானும் தன் கையிலிருந்த மோதிரத்தை உண்டியலில் போடவேண்டுமெனப் பிடிவாதம் செய்தாள். சிறுமியின் பெற்றோர் மோதிரத்திற்குப் பதிலாகப் பணம் நிறையத் தருகிறோம் என்றும், அதை உண்டியலில் போடும்படியும் மோதிரத்தைப் போடவேண்டாம் எனவும் கூறி சிறுமியிடம் நிறைய பணத்தைக் கொடுத்தார்களாம். சிறுமி சந்தோஷமாக உண்டியலில் பணத்தைப் போடும்போது, அவளது கையிலிருந்து மோதிரமும் கழன்று உண்டியலில் விழுந்து விட்டதாம். உண்டியலில் பணத்தைச் செலுத்துமுன் பெற்றோர்கள் சிறுமியின் கையிலிருந்த மோதிரத்தைக் கழற்ற முயன்றும் முடியாமல்போயிற்று!

சுழிபுரம், புதன்
சுழிபுரம் கிராமமுன்னேற்றச் சங்கத்தின் விசேட கூட்டம் சங்கத்தலைவர் திரு. க. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. அரசாங்கத்தின் உதவியுடன் சனவாசாயர் குளத்தையும், வெள்ளான விராய் குளத்தையும் சிரமதான முறையில் செய்வதாக தீர்மானிக்கப்பட்டது.

REGAL — JAFFNA
NOW SHOWING
Kirk Douglas
Sylvana Mangano
Anthony Quinn
in
ULYSSES
(Technicolor)

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) கெப்பிட்டல் (கொட்டாஞ்சேனை)
நவா (கும்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு) மொடர்ன் (பண்டாரவளை)
விஜிதா (ஹட்டன்) தீவொளி (துவரேலியா) ஜுப்பிட்டர் (குருநாகலை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 6-30, 9-30



எம். ஜி. ராமச்சந்திரன்
சாவித்திரி
மற்றும் பலர் நடித்த
வேட்டைக்காரன்

எனக்கு
மிகவும்
பிரியமானது



CEYLON CHOCOLATES LTD
கன்டொஸ்
உயர்ந்த ரகச் சொக்கலேற்று




ஏகவிநியோகஸ்தர்கள்:
ஷோ வலஸ் அன் ஹெஜெஸ் லிமிட்டெட்,
கொழும்பு - 3.
RAVI-CCL-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பம்பாய் வெங்காயத்தை இங்கு பயிரிடமுடியும்'

வவுனியா, புதன்

"நமது நாட்டில் வெளிவிடத்தில் இருந்து வரவழைக்கப்படும் பம்பாய வெங்காயத்தை நமது நாட்டிலே உற்பத்தி செய்யலாம். வவுனியாவில் உள்ள மண் வெங்காயச் செய்கைக்கு மிகவும் திறமையானதையால் இப் பருவ காலத்தில் கூடிய அளவு சிறிய வெங்காயத்தை விட்டுவிட்டு பம்பாய் வெங்காயத்தை உற்பத்தி செய்யவும் என்று தச்சன் குளத்தில் நடந்த செய்கைக் கூட்டத்தில் வவுனியா விவசாயப் போதனாசிரியர் திரு வி. நடராசா கூறினர்.

அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது: விவசாய இலாகா காவல் அதிகாரம் காட்டப்படும் பம்பாய் வெங்காயச் செய்கையால் நாட்டுக்கு நன்மையும், செலவுக் குறைவும் உண்டு. இதைவிட உத்தரவாத விலைக்கும் பம்பாய் வெங்காயம் கொடுக்கலாம்.

அதன்பின் வவுனியா உணவு உற்பத்தி மேற்பார்வையாளர் திரு பொ. கனகநாயகம் பேசும்போது வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யும் பம்பாய் வெங்காயத்தை இங்கு உற்பத்தி செய்யலாமென்றும், பம்பாய் வெங்காயச் செய்கையில் அதிகலாபம் உண்டென்றும் விதையை நாற்றுமேடையில் நாற்றுப் போட்டு அதைபிடுங்கி நாட்டுவதில்தான் கவனமெடுக்க வேண்டுமென்றும் கூறினர்.

## எம். பி.க்கு புதிய கார்

சுழிபுரம், புதன்

வட்டுக்கோட்டைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கத்திற்கு ஒரு புதிய மோட்டார் கார் வாங்கி கொடுப்பதற்கென நிதி சேர்ப்பதற்கான வைபவம் வழுக்கம்பரை அம்மன்கோவிலில் விசேஷ பூசையுடன் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை காப்புறுதி ஸ்தாபனத்தைச் சேர்ந்த திரு. எம். சிவப்பிரகாசம் ஆரம்ப நிதியாக ஒரு காசோலையை மோட்டார்கார் வழங்குவதற்கு ஏற்படுத்தப்பட்ட சபையினரிடம் வழங்கினர்.

## சைவ தத்துவங்கள் விஞ்ஞான ரீதியானவை

யாழ்ப்பாணம், புதன்

"மேலைநாட்டிலே விஞ்ஞானம் வளர்ந்து நமது பண்டைப் பெருமைகளை நிலைநிறுத்த உதவுகின்றது. வேண்டாதன என ஒதுக்கிவிட்ட புராணங்களிலும், சமயக் கோட்பாடுகளிலும் நம்பிக்கை கொள்ளச் செய்கின்றது. சைட்பீரியாவிலே காலத்திற்கு காலம் தோன்றும் ஒரு தொற்று நோய்க்கும் சூரியனிடத்திலே காணப்படும் மாற்றங்களுக்கும் நெருங்கிய தொடர்புருப்பதாக புள்ளிவிபர வரைப்படங்களோடு விளக்குகிறார். ஒரு ரஷ்ய விஞ்ஞானி இருதய நோய்க்கும் சூரியனுக்கும் சம்பந்தமுண்டு என்கிறார். ஒரு பிரஞ்சு விஞ்ஞானி சந்திரனின் மாற்றத்தினால் நோய்ப்போக்கில் மாற்றம் ஏற்படுகின்றது என்பதை ஒத்துக்கொள்கிறார்கள். அமெரிக்க விஞ்ஞானிகள் பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னேயே தமிழர் கோள்களின் சுழற்சியை கணக்கிட்டு, அவற்றின் போக்குக்கேற்ப விழாக்களையும், விரதங்களையும் ஏற்படுத்தியுள்ளார்கள் என திருமு. சிவானந்தம் வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் கந்தசுவாமி கோவிலில் வருடப்பிறப்பன்று நடைபெற்ற திருவிழாவிலே விசேட பேச்சாளராகக் கலந்து உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"சைவசமயத்தின் சாதனையிலுள்ள அடிப்படை தத்துவங்கள் விஞ்ஞான ரீதியானவை, தர்க்கரீதியானவை என்றும் மாறுதலை, அரசியற் பொருளாதாரக் கொள்கைகள் காலத்திற்குக் காலம் மாற்றம் அடையும். ஆனால் என்றும் அழியாத அறத்திலே நம்பிக்கை வைத்து நமது வாழ்க்கையைச் சீர்படுத்தினல், அமைதி பெற்று, இன்பம் பெற்று வாழலாம். புறக்டர் த. ஏகாம்பரம் வரவேற்புரை வழங்கினர்.

### உடுவில் கிராமசபை அறிவித்தல்

1965-ம் ஆண்டு மேமாதம் ஐந்தாந்திகதி புதன்கிழமை காலை 10 மணிவரையும் கீழ்க்காணும் வேலைகளுக்கு டெண்டர்கள் ஏற்கப்படும். டெண்டர் பத்திரங்கள் மே மாதம் நான்காந்திகதி பகல் 12 மணிவரையும் கொடுக்கப்படும்: ஏனைய விபரங்கள் கந்தோரில் அறிந்துகொள்ளலாம்.

| வேலை | டெண்டர் பணம் |
|---|---|
| 1 தன்னை ஒழுங்கை திருத்தம் | ரூபா 25-00 |
| 2 நீராம்பற்றை ஒழுங்கை திருத்தம் | ,, 25-00 |
| 3 மல்வம் மயானத்தில் கிணறு வெட்டுதல் | ,, 25-00 |

ச. முத்துலிங்கம்
தலைவர்
உடுவில் கிராமசபை

கிராமசபைக் கந்தோர்,
உடுவில் - சுன்னுகம்
10-4-65 125

## ஹிந்து, முஸ்லிம் பெயர்கள் மறையும்

புதுடில்லி, ஏப்ரல் 14

காசி ஹிந்து பல்கலைக்கழகத்தின் பெயரிலிருந்து "ஹிந்து" என்ற சொல்லையும், அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகத்தின் பெயரிலிருந்து "முஸ்லீம்" என்ற சொல்லையும் அகற்றி விடுவதுபற்றி இன்று லோக சபையில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

காசி ஹிந்து பல்கலைக்கழகம்பற்றி, தனிக் கமிட்டி ஒன்று ஆராய்ந்துவருவதாயும் ஹிந்து என்ற சொல்லை அகற்றவேண்டுமென அது சிபார்சு செய்தால் அரசாங்கம் அதை ஏற்கும் என்றும் கல்வி மந்திரி திரு. சக்ளா அறிவித்தார்.

இதைத் தொடர்ந்து அலிகார் பல்கலைக்கழகத்தின் பெயரிலிருந்து "முஸலீம்" என்ற சொல்லை அகற்ற ஒரு மசோதா கொண்டுவரப்படும் என அவர் தெரிவித்தார்.

### சிரார்த்த அஞ்சலி

வட்டுக்கோட்டை திருவாளர் கந்தப்பரதும் பாரியார் தெய்வானைப்பிள்ளையினதும் புத்திரரும் மலாயா அரசாங்கத்தின்கீழ் ஒடிற்றர் பதவியிலிருந்து இளைப்பாறியவரும் அங்காலை தாப்பா, கோலாலம்பூர் முருகனாலயங்களின் பரிபாலன சபைகளின் செயலாளர், தலைவராயும், விவேகானந்தாச்சிரமம், வித்தியாலயம் சங்கீத அபிவிருத்தி சபா இவற்றின் தலைவர் உபதலைவராயும், ஜெனரல் கிளறிக்கல் சேவிஸ் கிளப்பின் தலைவராயும் அங்கு அரசசேவை மேலுயர்ச்சி சோதனை வகுப்புப் போதகாசிரியராயும் பொதுநலச் சேவைகள் செய்தும்; இங்கு வட்டு சித்தன்கேணி கிராம முன்னேற்றச் சங்கம் அடைக்கலந்தோட்டம் கந்தசுவாமி கோவில் பரிபாலன சபைச் செயலாளராயும் வட்டு மூளாய் ஐக்கிய நாணயசங்கத் தலைவராயும் இறுதிக்காலம்வரை நற்பணிகள் புரிந்து அமரத்துவம் எய்திய திருவாளர் சி. க. தம்பையா அவர்களது சிரார்த்த தினம் நாளை 16-4-65 வெள்ளிக்கிழமையாகும் இப்புனித நாளில் அவரது ஆன்மா சாந்தி பெறுவதாகுக.

அன்னரின் ஆத்ம சாந்தக அஞ்சலி செலுத்துவோர்:
மனைவி த. இலட்சுமிதேவி
மகள் இ. இராசலட்சுமி,
மருகர் அ. இராசதுரை (அ. போதிக்கரி)
பேரர் அ. அருந்தவச்செல்வி, அ. அருட்செல்வி, அ. கலைச்செல்வி, அ. அருட்செல்வம்,
வட்டுக்கோட்டை. 45

### விற்பனைக்கு

பாவித்த இலங்கை முத்திரைகள் விலைக்கு வாங்கப்படும். விபரங்களுக்கு: த. பெட்டி இல. 896, கொழும்பு. (P. O. Box: 896, Colombo.) 21

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம். மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இலவசம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12-50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10-50.

வைத்தியர் மயூரஞானம்
கலாயவில்லியார் லேன்,
யாழ்ப்பாணம்

### மார்தை வடக்கு கிராம சபைக்கான கேள்விப் பத்திர அறிவித்தல்

மன்னூர்ப் பகுதி மார்தை வடக்கு கிராமசபைக்கு கீழ்க்காணும் வேலைகள் செய்து முடிப்பதற்கு தகுதியும், அனுபவமும் வாய்ந்த ஒப்பந்தகாரர் தேவை.

வேலையின் விபரம்

1. அடம்பன் புறவாட்டி கப்பித்தான் மோட்டை றோட்டுக்கு ஓர் கல்வெட் கட்டி றோட்டு அமைத்தல்.
2. கிராமசபை காரியாலயம் திருத்தம் செய்தல்.

தேவையான விபரங்கள் மார்தை வடக்கு கிராம சபைக் கந்தோரிலும் வவுனியா உள்ளூராட்சி உதவி அதிபர் கந்தோரிலும் அறிந்துகொள்ளலாம்.

இதற்குரிய கேள்விப்பத்திரங்கள் 28-4-65ந் திகதிக்கு முன் இக்கந்தோரில் ரூபா 50/- கட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

ஒப்பம்: ஞ. புல. யோசவான்
கி. ச. அக்கிராசனர்.
மார்தை வடக்கு.
அடம்பன், 10-4-65

### POST OF MANAGER

Applications will be received for the above post, by Messrs. "Elvee Traders" (under new management) Hendrick Building 503/1, N. H. M. Abdul Cader Road (Former Reclamation Road) Colombo 11, up to 19th April 1965, from those falling within the following categories:-

(I) G. C. E. Qualified with previous experience in accounts, office administration and Commercial Correspondence,

(II) Age Group-20-30. years

Salary- All inclusive monthly salary of Rs 240/- rising up to Rs 500/- annual increments of Rs. 15/-

Security- Rs. 2500/- in cash and Rs. 2500/- fidelity bond.

Copies of certificates in respectof character, education, experience and age should be enclosed.

SECRETARY
10th april 1965. 126

### விற்பனைக்கு

மாசார் - பளையில் இருபது ஏக்கர் தென்னந் தோட்டம் விலை ரூபா 18000. மற்றைய விபரம் நேரில். இ. சண்முகநாதன், 54, பிறவுண் றோட், யாழ்ப்பாணம். 46

சொந்தப் பாவனையிலுள்ளதும் நல்ல நிலைமையிலுள்ளதுமான வி. என். 5000 தொடர்பு இலக்கமுடைய ஆஸ்டின் A 40 வான் விற்பனைக்கு இருக்கின்றது. 8/8 ஒரால்லி வீதியிலுள்ள பார்வையிடலாம். 48

நல்ல நிலைமையிலுள்ள ஒருவரே பாவித்த ஒஸ்டின் 8 CY 45 உடன் விற்பனைக்கு உண்டு. பார்வையிடலாம். S. C. குணரத்தினம், உடுவில். 49




அருந்துக
நுவரெலியா
இது சிறந்த பியர்
ஏனெனில்
★ 100 வருட வடிமுறை அநுபவத்தைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது.
★ 8 சர்வதேசபரிசுகளைச் சுவீகரித்தது.
★ இதன் தனிப்பெரும் சுவையின் ரகசியம், தெளிவான, சுத்த நுவரெலியா நீரின் தன்மையேயாகும்.
மேலும், வடிமுறையில் முதிர்ந்த அநுபவமுடைய நால்வரால் உங்களுக்கென விசேஷமாக வடித்தெடுக்கப்பட்டது.
தெரிவதற்கு
பேல் ஏல்
லயன் லாகர்
ஜூபிலி ஏல்
சிங்ஹ பில்ஸ்னர்
சிலோன் புருவெரி லிமிட்டெட்

அழுக்கணவனையும்—புழுக்களையும் அழிப்பதற்கு
மெற்றசிஸ்ரொக்ஸ் உடன் - டிப்ரெறெக்ஸ்
METASYSTOX DIPTEREX
மேலே குறிக்கப்பட்டுள்ள மருந்தை விநியோகஞ் செய்ய விநியோகஸ்தர்கள் இல்லாத கிராமங்களிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
PHONE 397 JAFFNA ROYAL DISPENSARY T' GRAMS ROYAEL


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சமயப்பண்பைப் பேணுவது சைவமக்கள் கடமை"

## சைவஇளைஞர் மன்றக்கூட்டத்தில் கோப்பாய் எம். பி. பேச்சு

யாழ்ப்பாணம், புதன்

"சைவசமய வளர்ச்சி கடந்த நாநூறு ஆண்டு காலமாக மங்கிய நிலையை அடைந்தமைக்குக் காரணம் அந்நியர் ஆட்சியேயாகும். சுதந்திரம் பெற்ற நாம் எமது சமயப் பண்பாடுகளைப் பேணிக் காத்துவர வேண்டியதும் அவசியம்,

இவ்வாறு வண்ணை காவலர் பாடசாலையில் புத்தாண்டு தினத்தில் நடைபெற்ற வடமாநில சைவ இளைஞர் மாமன்ற வருடாந்தக் கூட்டத்தில் பேசிய கோப்பாய் எம்.பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

சைவசமயத்தவர்கள் தமது சமயப் பண்புகளைக் கடைப்பிடித்து நடக்கவேண்டும். அத்துடன் ஏனைய சமயத்தவர்களைப் புண்படுத்தாது பொதுநலன் கருதி நடந்துவரவேண்டியதும் கடமையாகும்;

மற்றைய சமயத்தவர் நமது சமயக் கருத்துக்களை இன்று மதிக்கத்தக்கதாக காலம் மாறி வருகின்றது. இவ்வேளையில் மனித உரிமைகளை மதித்து நடக்கப் பழகிக்கொள்ளவேண்டும். சமயங்கள் எல்லாவற்றினதும் அடிப்படைத் தத்துவம் ஆத்மீக நெறியை வளர்த்து இறைவனுடன் சேர்விக்கும் நெறிமுறைகளைக் காட்டுவதேயாகும்.

சைவப் பிள்ளைகட்கு பாடசாலைகளில்மாத்திரம் சமய அறிவைப் புகட்டவேண்டுமெனக் கொள்ளாது ஏனைய வழிகளிலும் தமது சமயத்தை அறியத்தக்கதாகச் செய்துவர வேண்டும்.

முன்னை நாள் உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

சைவசமயத்தைக் காப்பாற்றிக்கொள்வது சைவமக்களின் கடமை. அத்துடன் மற்றவர்களிடமிருந்து எம்மைக் காப்பாற்றிக்கொள்ளவும்வேண்டும்' எமது சமய அறிவை வளர்த்து சமயத்தின் உயர்ந்த இலட்சியங்களை வளரச் செய்யவும் வேண்டும்.

வழக்கறிஞர், திரு. ஆர். என். சிவப்பிரகாசம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

நமது சமயத்தின் எண்ணங்களைப் போற்றி வளர்த்துவருவதுடன் எங்கும் பரவச் செய்யவும்வேண்டும். சிறுவயதிலேயே சமய நம்பிக்கை ஏற்படவேண்டும். அதனாலே பாடசாலைகளில் சமயக் கல்வியில் போதிய கவனம் செலுத்தி வரவேண்டியதும் நமது கடமையாகும்.

ஆலயவிழாக்களில் வேதாகம முறைகளுக்கு மாறானவற்றை நீக்கி திருமுறை இசைகளுக்கு முக்கிய இடமளித்து வர வேண்டும்.

சைவசமய நூல்களை வெளியிடும் உரிமையை சைவபரிபாலனசபை, நாவலர் தர்மகர்த்தாசபை போன்ற சமயஸ்தாபனங்களிடம் ஒப்படைக்குமாறு அரசினரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் வடமாகாணத்தில் குற்றங்கள் அதிகரிப்பதற்கு மூலகாரணமாயுள்ள மரவரி முறையையும் மதுபானவகைகளையும் நீக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற தீர்மானமும், நல்லூரிலுள்ள நாவலர் தர்மக்காணியில் கட்டிடம் அமைத்து வேதாகமப் பாடசாலை (குருகுலப் பாடசாலை) ஸ்தாபிக்க சைவத் தமிழ் மக்கள் முயற்சி எடுக்கவேண்டும் எனக் கூறும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டன.

புதிய நிர்வாகிகள் விபரம் வருமாறு:-

போஷகர்- திரு. சி. உ. சோமசேகரம், தலைவர்- திரு. வை. இரகுநாத முதலியார், கூபதலைவர்கள்- ஆசிரியர்கள் திரு. சி. சிவரத்தினம், திரு. வ. சுந்தசாமி, பொதுக் காரியதரிசி- திரு. மு. யோகராசா, நிர்வாக காரியதரிசி- திரு. ஆ. சிவசுப்பிரமணியம், தனாதிகாரி திரு. வே. தங்கவடிவேல்.

மற்றும் கமிட்டி அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்,

---

## "இலட்சியத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எமது போராட்டத்தை ஆரம்பிப்போம். மொழி, பிரதேச சபைகள், அரசாங்க உத்தியோகத்தர் குடியேற்றம் போன்ற விஷயங்களில் நாம் அதிக கவனம் செலுத்துவோம். ஆகவே மக்கள மிகவும் பொறுமையாக இருக்கவேண்டும்

பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினர் திரு கே துரைரத்தினம் குறிப்பிட்டதாவது:

எமக்கும் ஐக்கிய தேசியக் கட்சியினருக்கும் இடையே ஏற்பட்ட உடன்படிக்கையினால் ஓர் தேசிய அரசாங்கத்தை அமைக்கக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது இந்த இடைவேளையில் நாம் செய்த ஒப்பந்தம் நிறைவேற நாம் பார்த்துக் கொள்ளவேண்டும். அதே நேரத்தில் அற்ப சலுகைகள போன்றவற்றைப் பெற்றுத் தரும்படி பாராளுமன்றப் பிரதிநிதிகளை தொந்தரவுகொடுக்கக்கூடாது. அப்படிச் செய்செய்வோமாகில் எமது நோக்கு சின்னாபின்னப்பட்டுவிடும். 1956-ம் ஆண்டுக்குப் பின்னர் எமது வாழ்வில் பல மாற்றங்களை இன்று காண்கிறோம். ஆகவே நாம் பொறுமையுடன் நடைபெறும் விஷயங்களைக் கவனிக்க வேண்டும்.

சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் வி என் நவரத்தினம் பேசுகையில் எமது சமூகம் முன்னேற வேண்டுமானால் எமது மத்தியிலுள்ள சகல குறைபாடுகளும் நீக்கப்பட வேண்டும் என்றார்.

கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் எஸ கதிரவேலுப்பிள்ளை பேசுகையில் எம் மத்தியில் உள்ள ஒருபகுதி மக்களின் உரிமைகளை மனிதாபிமானத்துடன் வழங்க வேண்டும் என்றார்

சி அப்புத்துரை, எம் கணபதிப்பிள்ளை, மு நடேச, த தனபாக்கியம், ந சற்குணதேவி, சி கதிரவேலு, மருமௌலானா, திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், க கணபதிப்பிள்ளை, பூ கையிலாயநாதர் ஆகியோர் உட்பட மற்றும் பலர் பேசினர், திரு அ அமிர்தலிங்கம் வரவேற்புக்கு நன்றி தெரிவித்தார்.

## இரு இடதுசாரிகள் விடுதலை

ஹைதராபாத், ஏப்ரல் 14

இடதுசாரி கம்யூனிஸ்ட் தொடர்பைத் துண்டித்துக் கொள்வதாய் வாக்குறுதியளித்ததன்பேரில் ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த திரு. அச்சுத ராமராவ், திரு. ஜி. ராமரெட்டி ஆகிய இருஇடதுசாரி கம்யூனிஸ்டுகள் காவலிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர்.

## 250 பேர் பலி

வாஷிங்டன், ஏப்ரல் 14

மத்திய அமெரிக்காவில் வீசிய சூறாவளியின் காரணமாக இதுவரை மாண்டவர்களின் எண்ணிக்கை 250க்கு அதிகமாயிருப்பதாய் அதிகாரிகள் தெரிவித்தனர்.

---

## "சமயஉண்மை...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

றிய சிவசங்கரன் பண்டிதரும் திருப்புகலூர் சென்று சமஸ்கிருதம் கற்றுப் பாண்டித்தியமடைந்தார். அவர் சமஸ்கிருதத்தில் பல நூல்களை எழுதியதால் படிக்கமுடியாது போய்விட்டது. மற்றச் சமயங்களைப் பின்பற்றுபவர்கள் உண்மையான அநுபவ ஞானத்தைப் பெறமுடியாது. படிப்பதிலும் பார்க்க அதன் பயனே முக்கியமானதாகும். உண்மைச் சைவன் செய்யத்தகாதவற்றை என்றுமே செய்யமாட்டான். சார்ந்ததன் வண்ணமாயிருக்கும் ஆன்மா இறைவனைச் சார்வதன் மூலம் நல்ல நிலையை அடையமுடியும். சமயநூல்கள் இறைவனை அடையும் நெறியைக் கூறி நம்மை வழிப்படுத்துவனவாகும். அவனை அடையும் நெறியை நாமே அநுபவித்து உணரவேண்டும். சமயங்களில் சமரசம் காணுவது தவறு. ஆறுகளெல்லாம் ஒரே கடலைச் சேர்வதுபோல எல்லாச் சமயங்களும் அடையும் நெறி ஒன்றேயெனக் கூறுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது. தோன்றுகின்ற ஆறுகளெல்லாம் கடலையடைவதில்லை. அதேபோலத் தோன்றுகின்ற சமயங்களெல்லாம் பேரின்பத்தைக் கொடுக்கும் வீட்டு நெறியை அடையச் செய்வனவல்ல, ஞானப்பிரகாசர் போன்ற களங்கமற்ற உள்ளமுடையவர்கள் தான் வாழ்விலே பேரின்பத்தைக் காணமுடியும். நாம் தேவார திருவாசகங்களை ஓதுவதலுல் சமய வாழ்வு நடத்துவதோடு நமது உள்ளத்தையும் பண்படுத்தமுடியும். நாம் சொல்வதைச் செய்யவேண்டும். செய்ய முடியாதவர்கள் சொல்லாமலே இருந்துவிடலாம்,

திரு. சி. பொன்னம்பலம் பேசுகையில் உலகிலுள்ள உயிர்கள் எல்லாவற்றையும் மனிதனின் உயிரோடு ஒத்து நோக்கும் தன்மையேற்பட வேண்டுமென்றும் அன்பும் அருளும் மனித உள்ளத்திலே இடம்பெற வேண்டுமெனவும், அநியாயம் மனித உள்ளத்தை விட்டகலவேண்டுமெனவும் கூறினர்.

திரு. க. கணபதிப்பிள்ளை பேசுகையில் ஞானப்பிரகாசர் அறியாமை இருளில் மூழ்கிக் கிடந்த சமுதாயத்தைத் தட்டி எழுப்பினரென்றும் உலகத்திலுள்ள மொழிகளுள் சிறந்த மொழிகளான தமிழிலும் வடமொழியிலும் பாண்டித்தியம் பெற்றுரென்றும் கூறினர்.

திரு. மு. மயில்வாகனம் பேசும்போது ஞானப்பிரகாசர் வரலாற்றைத் திரு. கு. அம்பலவாணர் எழுதவேண்டுமென்றும், அவருக்கு ஒரு கோயில் கட்டவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

---


### தேவை

அநுபவம் வாய்ந்த கைத்தறி நெசவாளர் பத்துப்பேர் பரந்தன் ப. நோ. கூ. சங்க நெசவுநிலையத்துக்குத் தேவை. வயது, கல்வி, அநுபவம் முதலிய விபரத்துடனும், இரு நற்சாட்சிப்பத்திரங்களுடனும் 24-4-65க்கு முன் இருபாலாரும் மனுச்செய்யலாம், பெண் நெசவாளர் கூடிவசிப்பதற்கு பிரத்தியேகமான வீடு ஒழுங்கு செய்து தரப்படும். 40


### அறிவித்தல்

தவில் வித்வான் என். எம். சிதம்பரநாதன் கிளாரினெட் கோஷ்டியினரை வரவழைத்துள்ளார். திருவிழாவுக்கும் மங்கள வைபவங்களுக்கும் இக்கோஷ்டியினரை அழைக்க விரும்புவோர் விபரங்களுக்கு: ... குமாரவீதி, ... சந்தை ... ஆசிரமத்தில் ... கொள்ளவும். 114

ஒரு பிரபலமான டுப்பிளிகேட்டரின் பிரபலமான மொடல் சகாயமானவிலைக்கு உங்

M 2

REX-ROTARY



எம்2 — விசேஷ அம்சங்கள்

காகிதங்கள் வைக்கும் பெட்டியில் 250 காகிதங்கள் வைக்கலாம். தபால் அட்டையிலிருந்து முழு அளவுக் காகிதம் வரையான எந்த அளவுள்ள காகிதத்திலும் பிரதிகள் எடுக்கலாம்.

உயரம், ஓரம் ஆகிய நிர்ணயங்களை இலகுவில் செய்யலாம். விரும்பிய விதத்தில் ஒழுங்கு செய்யக்கூடியது. ஸ்டென்சில் வெட்டுகள் செய்யக்கூடிய வகையில் சரி செய்யலாம்.

கௌண்டரில் நான்கு இலக்கங்கள் உண்டு. விரும்பினால், ஒற்றைக் கணக்கை மாற்றி சைபர் ஆக்கக்கூடிய வசதியும் செய்யப்பட்டுள்ளது. இது எடுக்கும் பிரதிகளின் எண்ணிக்கையைச் சரியாகக்கணக்கிடுகிறது. இயந்திரம் இயங்காதிருக்கும்போது கிரசங்கின் சுழற்சிமுறை மாற்றும் பொறி சுழற்சி எண்ணிக்கைகளை இது கணக்கிடுவதில்லை.

இத்தனை சிறப்பு வாய்ந்த அம்சங்களுடன் கூடிய எம்—2 இன் விலை குறைவானதே. பாவிக்கும்போதும் அதிக செலவு ஏற்படுவதில்லை. இதனால்தான் எம்—2 இன் விலைக்கு அது விரைவில் நல்ல சேவைபுரிகிறது.

எம்—2 மாற்றிய இன்னும் அதிகம் கூறலாம், உங்களுக்குக் கஷ்டமின்றி எவ்வளவுதூரம் அது சேவை செய்யும் என்பதை நீங்கள் அறிய வேண்டும், தொலைபேசி மூலம் அல்லது கடிதம் மூலம் எம்முடன் தொடர்புகொண்டால், எம்—2 வேலை செய்யும் விதத்தை உங்களுக்கு உங்கள் காரியாலயத்திலேயே காண்பிப்பதில் மகிழ்ச்சியடைவோம்,

விரைவில் இறக்குமதி செய்யப்படவிருக்கிறது.

ஆபீஸ் இக்கியுப்மெண்ட் லிமிட்டெட்
(OFFICE EQUIPMENT LTD.)

ஜஸ்லண்ட் கட்டிடம், கொழும்பு—3.
தொலைபேசி: 6168
தந்தி: ஆபீஸ் எவிட்ஸ்

# அருத எண்ணெய்

பல்லாண்டு காலமாக பல்லாயிரக் கணக்கான பாவனையாளர்களுக்குப் பயன் நல்கிவரும் ஒரு அற்புதமான கூந்தல் தைலம்;

அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இந்த எண்ணெய் — அறுபதாம்பச்சை எனும் தமிழ் மூலிகையையும், வேறு ஆயுர்வேத மூலிகைகள் நாற்பத்துநான்கினையும் சேர்மானமாகக் கொண்டது:

உஷ்ணமான உடல் உள்ளவர்களுக்கும், உஷ்ணப் பிரதேசங்களில் வசிப்பவர்களுக்கும் அதிசயிக்கத் தக்க பலன் அளிக்கவல்லது! இதனை தலையில் தேய்த்த மாத்திரத்தில்.... கூந்தல் அடர்த்தியாகவும், நீளமாகவும் வளரும். தலைமயிர் உதிர்வதும், நரைப்பதும் நிற்கும். மூளைக்குக் குளிர்ச்சியும், கண்களுக்குப் பிரகாசமும் உண்டாகும். நீங்காத ஜலதோஷமும், பீனிசமும் நீங்கும்.

அதுமட்டுமா?

கண் — தலை — காது — மூக்கு

சம்பந்தப்பட்ட சகல வியாதிகளும் குணமாகும்!

—சிறுவர் முதல் பெரியோர்வரை பாவிக்கலாம்—

தயாரிப்பாளர்:

பி. எம். திசாநாயக்க

(நான்கு கோவில்களின் தர்மகர்த்தா)

அருத எண்ணெய் அலுவலகம், கண்டி ரோட், கம்பளை.

—யாழ்ப்பாணத்திற்கு ஏகவிநியோகஸ்தர்கள்—

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

(மருந்து, மருந்துச் சரக்கு வாசனைத்திரவிய வியாபாரம்)

53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(தொலைபேசி: 541, 7068)


---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org